TNTET – 2012. FREE TRAINING FOR ALL.
By
NAPOO SOUNTHAR
www.napoos.blogspot.in

நன்றி : பா.ரமேஷ் B.COM., D.T.Ed., மா.கனகராஜ் D.T.Ed.,B.A., தட்டச்சு : பெ.மணிகண்டபிரபு

# சமூக அறிவியல்

( வகுப்பு - III, IV )

01) நாம் வாழும் பகுதியில் தேவைக்காக சாலைகள், இருப்புப்பாதை, கடைத்தெரு, வழிபாட்டுத்தலம் அமைந்துள்ளன

02) பள்ளியில் அனைத்து அலுவல்களும் தலைமைஆசிரியர் தலைமையில் நடைபெறுகின்றன

03) பள்ளியில் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு அன்புடனும், பொறுமையுடனும் கற்றுத் தருகின்றனர்

04) மாணவர்கள் மற்றவர்களுடன் கலந்து பழகுவதால் அவர்களின் தனித்திறன் வளர்கிறது

05) நாம் ஓர் ஊரில் இருந்து மற்றொரு ஊருக்குச் செல்ல சாலைகள் பயன்படுகின்றன

06) தார்சாலைகள் என்பது கிராமங்களை நகரங்களுடன் இணைக்கிறது

07) பெரிய நகரங்களில் சாலையை கடப்பதற்கு பாலங்களும், சுரங்கங்களும் அமைக்கப்பட்டுள்ளன

08) சாலையில் கடந்து செல்பவர்கள் பாதசாரிகள்

09) ஓர் இடம் எங்குள்ளது அதை எப்படிச் சென்றடைவது என்பதை அறிய திசைகளும் வரைபடங்களும் பயன்படுகின்றன

10) கடலில் பயணம் செய்வோர் திசைகளை அறிய திசைகாட்டும் கருவியைப் பயன்படுத்துகின்றனர்

11) திசைகாட்டும் கருவியின் காந்தமுள் எப்பொழுதும் வடக்கு திசையையே நோக்கி நிற்கும்

12) வாகனங்களுக்கான எச்சரிக்கை விளக்கான சிவப்பு நிறம் நிற்பதை குறிக்கும்

13) வாகனங்களுக்கான எச்சரிக்கை விளக்கான மஞ்சள் நிறம் கவனிப்பதை குறிக்கும்

14) வாகனங்களுக்கான எச்சரிக்கை விளக்கான பச்சை நிறம் செல்வதை குறிக்கும்

15) பாதசாரிகளுக்கான எச்சரிக்கை விளக்கு சிவப்பு நிறம் நிற்பதையையும் பச்சை நிறம் செல்வதையும் குறிக்கும்

16) போக்குவரத்து நான்கு நிலைகளில் நடைபெறுகிறது

17) உலகின் பல இடங்களையும் சாலைகள் இணைக்கிறது

18) நீர்வழிப்போக்குவரத்து சாதனங்கள் கப்பல், படகு, பரிசல்

19) பஞ்சம் (ம) வெள்ளநிவாரண நேரங்களில் உணவு மற்றும் உடைகளை மக்களிடம் விரைந்து கொடுக்க ஹெலிகாப்டர் தேவையாகிறது

20) இந்தியாவின் தென்கிழக்கில் உள்ள கடற்கரை கிராமம் தனுஷ்கோடி

21) ஒரிஸ்ஸாவில் கொனார்க் பகுதியில் சூரியனார் கோவில் உள்ளது

22) கௌகாத்தி இந்தியாவின் வடகிழக்கு பகுதியில் உள்ளது

23) கௌகாத்தியில் கஜிரங்கா என்ற உயிரியல் பூங்கா உள்ளது

24) மேகாலயாவின் தலைநகர் ஷில்லாங்

25) ஸ்ரீ நகரில் தால் ஏரி உள்ளது

26) இந்தியாவில் பெரும்பாலான மக்களால் சேர்த்துக்கொள்ளப்படும் உணவுப்பொருள் அரிசி ஆகும்
27) கரும்பு செழித்து வளர மிதமான வெப்பநிலை, வண்டல்மண், அதிகளவு நீர் போன்றவை தேவை
28) ஓரிடத்தின் மண்வளம் மற்றும் காலநிலைக்கு ஏற்பவே பயிர்கள் விளையும்
29) கோதுமை, சோளம், கம்பு, கேள்வரகு, சாமை, வரகு போன்றவை திணைவகைகள் ஆகும்
30) மாவுச்சத்து என்பது தானியங்கள் (ம) பருப்புவகைகள் ஆகியவற்றை கொண்டது
31) கீரைவகைகளில் நார்ச்சத்து, இரும்புச்சத்து, உயிர்ச்சத்து உள்ளது
32) இறைச்சி, பால், முட்டை போன்றவற்றில் புரதம் மற்றும் கொழுப்பு சத்துகள் உள்ளன
33) 2004ல் இந்தியாவின் குடியரசு தலைவராக இருந்தவர் A.P.J.அப்துல்கலாம்
34) தகவல் தொடர்பு துறை வளர்ச்சியால் தபால் தந்தி அனுப்புவது குறைந்துள்ளது
35) கணினியின் வரவால் தொலைநகல், மின்னஞ்சல், கைபேசி போன்றவை மூலமாக தகவல் தொடர்பு நடைபெறுகிறது
36) தங்கம், வெள்ளி ஆவணங்கள் போன்றவற்றை வங்கியில் பாதுகாப்புபெட்டகத்தில் பாதுகாக்கலாம்
37) வங்கிக் கணக்கில் உள்ள பணத்தை எடுக்க தானியங்கி பணப்பட்டுவாடா இயந்திரம் பயன்படுகிறது
38) நாம் ஆரோக்கியமாக வாழ மருத்துவமனைகளும், சுகாதார நிலையங்களும் உதவுகிறது
39) வாரம் ஒருமுறை கிராமப்பகுதிகளுக்கு சென்று மருந்து வழங்கி வருபவர் செவிலியர்
40) கிராமத்தை ஊராட்சி என்று கூறுவர்
41) குக்கிராமங்களில் நடமாடும் மருத்துவமனைகள் மக்கள் நலனுக்காக அமைக்கப்பட்டு உள்ளன
42) பேரூராட்சியை பெரிய கிராமம் எனக் கூறலாம்
43) நகரம் நகராட்சி எனவும் பெரிய நகரம் மாநகராட்சி எனவும் அழைக்கப்படுகிறது
44) நியாய விலைக்கடை குடிமைப்பொருள் வழங்கும் பொது விநியோகக்கடை என்று அழைக்கப்படுகிறது
45) குற்றம் நிகழாமல் தடுத்தல், போக்குவரத்தை சரிசெய்தல், பொதுச்சொத்துக்களை பாதுகாத்தல் காவலரின் கடமையாகும்
46) தீயணைப்பு அவசர தேவைக்கு 101 ஐ தொடர்பு கொள்ளலாம்
47) புயல், வெள்ளம், நிலநடுக்கத்தை இயற்கை சீற்றம் என கூறலாம்
48) தமிழ்நாட்டில் மொத்தம் 32 மாவட்டங்கள் உள்ளன
49) நம் நாட்டின் கிழக்கு பகுதியில் அமைந்துள்ள கடல் வங்காளவிரிகுடா
50) நம் மாவட்டம் சமவெளிப்பகுதியில் அமைந்துள்ளது
51) கோடைக்காலம் மார்ச்-மே குளிர்காலம் டிசம்பர்-பிப்ரவரி மழைக்காலம் செப்டம்பர்-நவம்பர் வசந்தகாலம் ஜூன்-ஆகஸ்ட் மாதங்களில் உருவாகிறது
52) மாமல்லபுரம் பல்லவ மன்னர்கள் துறைமுகமாக உள்ளது
53) மாமல்லபுரத்தில் மன்னர் நரசிம்மவர்மனால் கடற்கரை கோவிலும், குடைவரைக் கோவிலும் கட்டப்பட்டன
54) திருமூர்த்திகுகை, வராகக்குகை, புலிக்குகை, சிறப்புபயிற்சிக்கூடங்கள், கடற்கரை பழைய மற்றும் புதிய கலங்கரைவிளக்கம் மாமல்லபுரத்தில் காணப்படுகிறது
55) பாறைகளைக் குடைந்து உருவாக்கப்பட்ட குகைக்கோவில்களும், சிற்பங்களும் மாமல்லபுரத்தின் தனிச்சிறப்புகளாகும்
56) மாமல்லபுரத்தில் ஒரே கல்லில் செதுக்கப்பட்டுள்ள ஐந்து இரதங்கள் காணப்படுகிறது

57) மாமல்லபுரத்தில் பழமையான எழுத்துக்களான தேவநாகரி (ம) தமிழ்க்கிரந்த எழுத்துக்கள் உள்ளன
58) ஐந்து ரதங்களுக்கும் பஞ்சபாண்டவர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளது
59) ஐவகை நிலங்கள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை
60) மலையும் மலை சார்ந்த பகுதியும் குறிஞ்சி
61) காடும் காடு சார்ந்த பகுதியும் முல்லை
62) வயலும் வயல் சார்ந்த பகுதியும் மருதம்
63) கடலும் கடல் சார்ந்த பகுதியும் நெய்தல்
64) மணலும் மணல்சார்ந்த பகுதியும் பாலை
65) குறிஞ்சி மலர் 12ஆண்டுகளுக்கு ஒருமுறை பூக்கும்
66) எவ்வளவு உயரம் பறந்தாலும் தரையில் உள்ள இரையை சரியாக அடையாளம் காணும் பறவை பருந்து
67) தமிழ்நாட்டில் காணும் பழங்காலப் பறவைகளுள் ஒன்று தவிட்டுக் குருவி
68) தவிட்டுக் குருவி குழுவாகவே காணப்படுவதால் ஏழுசகோதரர்கள் (அ) ஏழுசகோதரிகள் என்று அழைக்கப்படுகிறன
69) மனிதர்களிடம் அன்பாகப் பழகும் பறவை கருஞ்சிட்டு
70) கூ.கூ என கூவும் பறவை செம்பூத்து
71) கூடுகட்டுவதில் மிகச்சிறந்த பறவை தூக்கணாங்குருவி
72) வித்தியாசமான அலகினால் இரட்டைவாயன் இந்தப் பெயரைப் பெற்றது
73) தமிழ்நாட்டில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் வேடந்தாங்கல் பறவைகள் சரணலயம் உள்ளது
74) பறவைகள் பல ஆயிரம் மைல்களுக்கு அப்பாலிலிருந்து வருவது வலசைபோதல் என அழைக்கப்படுகிறது
75) பறவைகள் நவம்பர் முதல் மார்ச் வரை சரணாலயங்களில் இருக்கும்
76) சாத்தான்குளம் கொடியக்கரையில் பறவைகள் சரணாலயம் உள்ளது
77) துஷ்யந்தன் எனும் அரசனின் மகன் பரதன் ஆவார்
78) பரதன் இமயம் முதல் குமரி வரை ஆட்சி செய்தமையால் சக்கரவர்த்தி என்று அழைக்கப்பட்டார்
79) பரதன் ஆட்சி செய்த கண்டம் பரதகண்டம் என்று அழைக்கப்பட்டது
80) ஜான்சிராணி 1828ல் நவம்பர் 19ல் வாரணாசியில் பிறந்தார்
81) ஜான்சிராணியின் குழந்தைப் பெயர் மணிகர்ணிகா
82) ஜான்சிராணி திருமணத்திற்குப் பிறகு லட்சுமிபாய் என அழைக்கப்பட்டார்
83) லட்சுமிபாய் முதன் முதலாக 1857ல் இந்திய விடுதலைப்போரில் கலந்து கொண்டார்
84) இந்திய தேசிய படையின் முதல் பெண்கள் பிரிவிற்கு ஜான்சிராணி என பெயர் சூட்டப்பட்டது
85) ஜான்சிராணி லட்சுமிபாய் இறந்த ஆண்டு 1858
86) பூமியைச் சுற்றி வளிமண்டலம் உள்ளது
87) சூரியன், விண்மீன்கள், நிலா போன்றவை விண்வெளியில் காணப்படுகின்றன
88) சூரியன் ஒரு ஒளிரும் விண்மீன் ஆகும்
89) விண்மீன் என்பது விண்வெளியில் காணப்படும் ஒரு பெரிய ஒளிரும் கோளாகும்
90) விண்மீன் என்பது வாயுக்களையும், துகள்களையும் கொண்ட கலவையால் ஆனது
91) தன்னைத்தானே சுற்றிக்கொண்டு ஒரு குறிப்பிட்ட நீள்வட்டப்பாதையில் சூரியனையும் சுற்றிவரும் பருப்பொருளை கோள்கள் என்கிறோம்
92) ஒரு கோளின் ஈர்ப்பு விசையால் அக்கோளை சுற்றிவரும் ஒரு விண்பொருளை துணைக்கோள் என்கிறோம்

93) பூமியின் துணைக்கோள் சந்திரன்
94) விண்வெளியில் பல துணைக்கோள்கள் உள்ளன
95) செவ்வாய் மற்றும் வியாழன் கோள்களுக்கு இடையில் ஆயிரக்கணக்கான துணைக்கோள்கள் உள்ளன
96) செவ்வாய் மற்றும் வியாழன் கோள்களுக்கு இடையில் உள்ள விண்கற்களை குறுங்கோள்கள் எனலாம்
97) விண்வீழ்கல் என்பது விண்வெளியில் இருந்து வளிமண்டலத்தின் வழியாக பூமியின் மேற்பரப்பை அடையும் பொருளாகும்
98) விண்வீழ்கல் என்பது விண்வெளியில் உள்ள போது விண்கல் எனப்படுகிறது
99) எரிகற்கள் எரிநட்சத்திரம் என அழைக்கப்படுகிறது
100) சில விண்கற்கள் முழுவதும் எரியாமல் பாதி எரிந்த நிலையில் பூமியில் விழுவதை வீழ்கற்கள் எனலாம்
101) நிலாவை சந்திரன், மதி, அம்புலி, திங்கள் என்ற பெயரில் அழைக்கலாம்
102) நிலா ஒரு பாறை கோளமாகும்
103) நிலா கரடுமுரடாக இருப்பதால் சூரிய ஒளியை முழுமையாக பிரதிபலிக்க இயலுவதில்லை
104) நிலா பூமியை ஒருமுறை சுற்றிவர 27.3 நாள்கள் ஆகின்றன
105) 22-10-2008 அன்று அன்று நிலாவை ஆய்வதற்காக இந்தியா அனுப்பிய விண்கலம் சந்திராயன்-1
106) சூரியனும் ஒரு விண்மீன் ஆகும்
107) சூரியனை நாம் வாயுக்களின் கலவை எனலாம்
108) சூரியனில் அதிகளவு ஹைட்ரஜன் (ம) ஹீலியம் மிகச்சிறிய அளவில் இதர வாயுக்களும் உள்ளது
109) சூரியனில் ஹைட்ரஜன் வாயு இணைந்து ஹீலியம் வாயு உருவாகிறது
110) சூரியன் ஒரு நெருப்புக்கோளம் எனலாம்
111) சூரியனும் அதைச் சுற்றிவரும் 9 கோள்களும் சூரிய குடும்பம் எனலாம்
112) சூரியனின் ஈர்ப்புவிசைக் காரணமாக கோள்கள் அதன் சுற்றுப்பாதையில் சுற்றி வருகின்றன
113) சூரிய குடும்பத்தில் உள்ள மிகப்பெரிய கோள் வியாழன்
114) சூரிய குடும்பத்தில் சூரியனை மிக அதிவேகமாக சுற்றி வரும் கோள் புதன்
115) புதன் சூரியனை சுற்றிவர 88 நாட்கள் ஆகின்றன
116) சூரிய குடும்பத்தில் இரண்டாவது கோள் வெள்ளி
117) வெள்ளி குறிப்பிட்ட மாதங்களில் அதிகாலையிலும் குறிப்பிட்ட மாதங்களில் மாலை நேரத்திலும் கீழ்வானத்தில் பிரகாசமாகத் தெரிகிறது
118) வெள்ளி விடிவெள்ளி என்றும் மாலை நட்சத்திரம் என்றும் அழைக்கப்படுகிறது
119) நிலவிற்கு அடுத்து பிரகாசமாக தெரியும் கோள் வெள்ளி
120) சூரிய குடும்பத்தின் மூன்றாம் கோள் பூமி
121) பூமியின் மொத்த மேற்பரப்பில் 71% நீரும் 29% நிலமும் உள்ளது
122) பூமியை உயிர்க்கோளம் என்றும் அழைக்கலாம்
123) சூரிய குடும்பத்தின் நான்காவது கோள் செவ்வாய்
124) செவ்வாய் சிவப்புக் கோள் எனவும் அழைக்கப்படுகிறது
125) செயலிழந்த எரிமலைகள், பாறைகள் நிறைந்த பாலைவனங்கள், பனிமூடிய துருவங்கள் போன்றவை செவ்வாய் கோளில் காணப்படுகிறது
126) இரும்புத்தாதுக்களும், புழுதிப்படலமும் படர்ந்து செவ்வாய் கோள் சிவப்பாக காணப்படுகிறது
127) சூரிய குடும்பத்தின் ஐந்தாவது கோள் வியாழன்
128) சூரிய குடும்பத்தின் மிகச்சிறிய கோள் புதன்

129) வியாழன் கோள் வேதிப்பொருள்கள் தன்மைக்கேற்ப நிறத்தை மாற்றிக்கொள்கிறது
130) வியாழன் சூரியனை சுற்றிவர 12 ஆண்டுகள் ஆகிறது
131) சூரிய குடும்பத்தின் ஆறாவது கோள் சனி
132) ஏழு வளையங்களைக் கொண்ட கோள் சனி
133) கலிலியோ கலிலி என்பவர் முதன் முதலில் சனிக்கோளில் உள்ள வளையங்களை கண்டறிந்தார்
134) சூரிய குடும்பத்தின் ஏழாவது கோள் யுரேனஸ்
135) தன் அச்சில் சுழலாத கோள் யுரேனஸ்
136) சூரிய குடும்பத்தின் எட்டாவது கோள் நெப்டியூன்
137) நெப்டியூன் சுற்றுப்பாதையில் குறுக்கிடும் கோள் புளூட்டோ
138) பூமியை வலம் வரும் துணைக்கோள் நிலா
139) தானாகவே ஒளிரும் தன்மை கொண்டது விண்மீன்கள்
140) அமேரிக்காவில் காலைபொழுதாக இருக்கும் போது ஜப்பானில் இரவாக இருக்கும்
141) பூமி தன்னைத்தானே சுற்றிக்கொள்வதை சுழற்சி என்கிறோம்
142) பூமி கற்பனை அச்சான 23 ½ சாய்ந்த நிலையில் சுழல்கிறது
143) பூமி 23 ½ சாய்ந்த நிலையில் இருக்கும்போது வட துருவத்தையும் தென் துருவத்தையும் இணைக்கிறது
144) பூமி தன்னைத்தானே 24மணி நேரம் சுற்றிக்கொள்வதை ஒருநாள் எனலாம்
145) பூமியின் சுழற்சியினால் இரவு, பகல் உண்டாகிறது
146) பூமி சுழன்று கொண்டே சூரியனை நீள் வட்டப்பாதையில் சுற்றி வருகிறது
147) பூமி சூரியனை ஒரு முறை சுற்றிவர 365 ¼ நாள் ஆகிறது
148) பூமியின் அச்சு சாய்வாக இருப்பதாலும் சூரியனை சுற்றி வருவதாலும் ஏற்படும் வானிலை மாற்றங்களை பருவகாலங்கள் என்று அழைகின்றோம்
149) பூமியின் மையப்பகுதியில் வரையப்பட்ட கற்பனைக்கோடு நிலநடுக்கோடு ஆகும்
150) சூரியனின் கதிர்கள் பூமியின் மீது செங்குத்தாக விழும்போது கோடைக்காலம் உருவாகிறது
151) சூரியனின் கதிர்கள் பூமியின் மீது சாய்வாக விழும்போது குளிர்காலம் உருவாகிறது
152) பருவகாலங்கள் நான்கு வகைப்படும்
153) பருவகாலங்கள் கோடைக்காலம், வசந்தகாலம், குளிர்காலம், மழைக்காலம் ஆகியவையாகும்
154) பருவகால மாற்றங்கள் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை வருகிறது
155) கோடைகாலத்திற்கும் குளிர்காலத்திற்கும் இடையில் உள்ள காலம் வசந்தகாலம்
156) இரவும் பகலும் ஒரே அளவாக இருக்கும் காலங்கள் வசந்தகாலம், இலையுதிர்காலம்
157) பகல் பொழுது நீண்டும் இரவுப்பொழுது குறுகியும் காணப்படும் காலம் கோடைக்காலம்
158) பகல்பொழுது குறுகியும் இரவுப்பொழுது நீண்டும் காணப்படும் காலம் குளிர்காலம்
159) கோடைக்காலம் - மார்ச் - மே
160) குளிர்காலம் - டிசம்பர் - பிப்ரவரி
161) மழைக்காலம் - செப்டம்பர் - நவம்பர்
162) வசந்தகாலம் - ஜூன் - ஆகஸ்ட்
163) பகல் பொழுதில் மிதமான வெப்பமும் இரவுப்பொழுதில் குளிரும் காணப்படும் காலம் குளிர்காலம்
164) வட அரைக்கோளத்தில் நீண்ட பகல் காணப்படும் நாள் ஜூன் 22
165) வட அரைக்கோளத்தில் குறுகிய பகல் காணப்படும் நாள் டிசம்பர் 22

166) பூமியில் ஓர் இடத்தில் ஒரு குறிப்பிட்ட காலத்தில் நிலவும் வெப்பநிலை, காற்று, மேகம், மழையைக் குறிப்பது வானிலை

167) ஒரு நாட்டில் அல்லது பெரும் நிலப்பரப்பில் நீண்ட காலம் நிலவும் வானிலையின் சராசரியை காலநிலை என்கிறோம்

168) கிரகணம் என்ற சொல்லுக்கு ஒளிமறைப்பு என்று பொருள்

169) பூமிக்கும் சூரியனுக்கும் இடையில் சந்திரன் வரும்போது பூமியில் சூரிய ஒளி தெரிவதில்லை இது சூரிய கிரகணம்

170) புவி சூரியனுக்கும் சந்திரனுக்கும் இடையில் வரும்போது சந்திரகிரகணம் ஏற்படுகிறது

171) சந்திரகிரகணம் பௌர்ணமி நாளில் நடைபெறுகிறது

172) இயற்கையில் பூமியில் இருந்து கிடைக்கும் மனித இனத்திற்கு பயன்படும் வளங்களை இயற்கை வளங்கள் என்கிறோம்

173) புதுப்பிக்ககூடிய வளங்கள் நீர், சூரியஒளி, நிலம், காற்று

174) புதுப்பிக்க இயலாத வளங்கள் தங்கம், பெட்ரோல், நிலக்கரி

175) நீர், சூரியஒளி, காற்று ஆகியவற்றை நாம் பயன்படுத்துவதால் அவை குறைந்தாலும் மீண்டும் உருவாகிறது. எனவே இவை புதுபிக்கக் கூடிய வளங்கள் ஆகும்

176) இயற்கையில் பூமிக்கு அடியில் கிடைக்கும் நிலக்கரி, பெட்ரோலியம் மற்றும் பிற கனிமங்கள் குறைந்து கொண்டே செல்வதால் இவற்றை புதுப்பிக்க இயலாத வளங்கள் என்கிறோம்

177) மனிதன் வாழ தண்ணீர் 2.5% மட்டுமே உள்ளது

178) உலகிலேயே மிக நீளமான அணை இந்தியாவில் உள்ள ஹிராகூட் அணை

179) இந்தியாவின் மிக உயரமான அணை பக்ராநங்கல்

180) சராசரியாக ஒரு மனிதன் ஒரு நாளைக்கு 125 லிட்டர் நீரை பயன்படுத்துகிறான்

181) உலக தண்ணீர் தினம் மார்ச்22

182) நீலகிரி மாவட்டத்தில் முதுமலை சரணாலயம் உள்ளது

183) காற்றை பாதுகாக்க வாகனங்களில் புகைவடிகட்டியைப் பயன்படுத்த வேண்டும்

184) காற்றை பாதுகாக்க வாகனங்களில் பெட்ரோலுக்கு பதிலாக இயற்கை எரிவாயுவை பயன்படுத்தவேண்டும்

185) இந்திய நிலப்பரப்பில் ஐந்தில் ஒருபங்கு காடுகள் உள்ளன

186) மரத்தின் வயதை அதில் உள்ள வளையங்களை வைத்து கண்டறியலாம்

187) மரத்தின் வயதை வளையங்களை வைத்து கணக்கிடுவதற்கு டென்ரோகுரோனாலஜி

188) பூமியில் உள்ள ஆக்ஸிஜனில் 25% தென் அமெரிக்காவிலுள்ள அமேசான் காட்டிலிருந்து கிடைக்கிறது

189) ஆண்டுதோறும் ஜூலை முதல்வாரம் மரம் நடுவிழா நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது

190) காடு வளர்ப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த பள்ளிகளில் தேசிய பசுமைப்படை அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது

191) புவி வெப்பமடைவதற்கான காரணங்களுள் ஒன்று கார்பன்-டை-ஆக்ஸைடு அதிகரித்தல்

192) தமிழக அரசு முதுமலையை கி.பி 1940ல் சரணாலயமாக அறிவித்தது

193) இந்திராகாந்தி வன விலங்கு சரணாலயம் ஆனைமலைத்தொடரில் உள்ளது ( கோயமுத்தூர் மாவட்டம் )

194) மணல் பரப்பு நிறைந்த கடலோர சரணாலயம் கோடியக்கரை சரணாலயம்

195) ஆலிவ் ரிட்லி என அழைக்கப்படும் கடலாமை கோடியக்கரை சரணாலயத்தில் அதிகம் காணப்படுகிறது

196) 1989ம் ஆண்டு சாம்பல் நிற அணில்களை பாதுகாப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள சரணாலயம் உள்ள இடம் ஸ்ரீ வில்லிபுத்தூர் (சாம்பல் நிற அணில் வன விலங்கு சரணாலயம் )

197) இந்தியாவின் தென்கிழக்கு கரையோரத்தில் ஆழ்கடலில் அமைந்துள்ள தேசிய பூங்கா மன்னார் வளைகுடா ஆழ்கடல் தேசிய பூங்கா

198) இந்தியாவின் எட்டாவது தேசிய பூங்கா கிண்டிதேசிய பூங்கா

199) கிண்டி தேசிய பூங்கா கில்பர்ட்டு ரோடிரிக்கிசு என்ற ஆங்கிலேயரின் சொந்த வேட்டையாடும் பகுதியாக இருந்தது

200) 1958ல் கிண்டி தேசிய பூங்கா தமிழ்நாடு வனத்துறையின் கண்காணிப்பின் கீழ் வந்தது

201) கிண்டி தேசிய பூங்காவில் 350 க்கும் மேற்பட்ட தாவர வகைகள் உள்ளது

202) 1994ம் ஆண்டு கூந்தன்குளம் சரணாலயமாக அறிவிக்கப்பட்டது

203) தமிழ்நாட்டில் அறிவிக்கப்பட்ட மொத்த தேசியபூங்கா 5

- இந்திராகாந்தி தேசியபூங்கா - 1989
- முதுமலை பூங்கா - 1990
- முகூர்தி தேசிய பூங்கா - 1982
- மன்னார்வளைகுடா ஆழ்கடல்பூங்கா - 1980
- கிண்டி தேசியபூங்கா - 1976

204) தமிழ்நாட்டில் ஏழு வனவிலங்கு சரணாலயம் அமைக்கப்பட்டுள்ளது
இந்திரா வனவிலங்கு சரணாலயம் - கோயம்புத்தூர் மாவட்டம்
சத்தியமங்கலம் சரணாலயம் - ஈரோடு மாவட்டம் - சரணாலயமாக அறிவிக்கப்பட்ட ஆண்டு 2008

205) தமிழ்நாட்டில் அமைந்துள்ள பறவைகள் சரணாலயங்கள் :
சித்தரன்குடி பறவைகள் சரணாலயம் - இராமநாதபுரம் மாவட்டம்
காஞ்சின்குளம் பறவைகள் சரணாலயம் - இராமநாதபுரம் மாவட்டம்
காரைவெட்டி பறவைகள் சரணாலயம் - பெரம்பலூர் மாவட்டம்
வேடந்தாங்கல் பறவைகளின் சரணாலயம் - காஞ்சிபுரம் மாவட்டம்
வெள்ளோடுபறவைகள் சரணாலயம் - ஈரோடு மாவட்டம்
வெட்டாங்குடி பறவைகள் சரணாலயம் - சிவகங்கை மாவட்டம்
வடுவூர் பறவைகள் சரணாலயம் - நாகப்பட்டினம் மாவட்டம்
புலிகாட் ஏரி பறவைகள் சரணாலயம் - திருவள்ளூர் மாவட்டம்
கூந்தன்குளம் - திருநெல்வேலி மாவட்டம்
உதயமார்த்தாண்டபுரம் பறவைகள் சரணாலயம் - திருவாரூர் மாவட்டம்
பாய்ண்ட் காலிமர் பறவைகள் சரணாலயம் - தஞ்சை மாவட்டம்
விராலிமலை மயில்கள் சரணாலயம் - புதுக்கோட்டை மாவட்டம்
தஞ்சாவூர் கள்ளபெரம்பலூர் எரி பறவைகள் சரணாலயம் (தற்போது பறவைகள் சரணாலயமாக அறிவிக்கப்பட்டது )

206) தமிழ்நாட்டில் விலங்குகள் (ம) பல்வேறு உயிரினங்களை பாதுகாக்கும் மூன்று முக்கிய இடங்கள் மன்னார்வளைகுடா, அகஸ்தியமலை, மேற்குதொடர்ச்சிமலை, நீலகிரிமலைத்தொடர்

207) கிழக்கிந்திய கம்பெனி ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு கி.பி 1600

208) முதன் முதலில் கிழக்கிந்திய கம்பெனி நிறுவப்பட்ட இடங்கள் சூரத், சென்னை, கொல்கத்தா

209) வேலூர் புரட்சி ஆண்டு கி.பி 1806

210) கி.பி1806ல் நடைபெற்ற வேலூர் புரட்சியானது 1857ல் ஆண்டில் ஏற்பட்ட பெரும்புரட்சிக்கு ஒத்திகையாகும் எனக் கூறியவர் V.D.சாவார்கர்

211) பெரும்புரட்சி ஏற்பட்ட ஆண்டு 1857

212) வேலூர் புரட்சிக்கு முக்கிய காரணங்கள் ஐரோப்பிய பாணியிலான தொப்பிகளை அணியச் செய்தது, சமய அடையாளங்களான திலகமிடுதல், தாடி வளர்த்தல் ஆகியவற்றிற்கு தடை

213) ஆங்கிலேயர்கள் இந்தியச் சிப்பாய்களை பசு (ம) பன்றி கொழுப்பு தடவப்பட்ட தோட்டாக்களை பயன்படுத்த வற்புறுத்தியது பெரும் புரட்சிக்கு காரணமாக அமைந்தது

214) இந்து மற்றும் இஸ்லாமியர் சமய உணர்வை புண்படுத்திய நிகழ்வு பசு (ம) பன்றி கொழுப்பு தடவப்பட்ட தோட்டாக்களை பயன்படுத்த செய்தது

215) பெரும்புரட்சியின் முக்கிய தலைவர்கள் பகதூர்ஷா, நானாசாகிப், தாந்தியாதோபே, ஜான்சிராணி லட்சுமிபாய்

216) இந்தியர்களின் குறைகள் (ம) கோரிக்கைகளைப் பூர்த்தி செய்ய கி.பி.1885,ல் இந்திய தேசிய காங்கிரஸ் ஆலன் ஆக்டேவியன் ஹியூம் என்பவரால் கொண்டுவரப்பட்டது

217) வங்கப்பிரிவை 1905ல் ஆங்கிலேய அரச பிரதிநிதியான கர்சன்பிரபு என்பவரால் கொண்டுவரப்பட்டது

218) சுதேசி இயக்கம் தொடங்கப்பட்ட ஆண்டு 1905

219) ஜாலியன் வாலாவாக் படுகொலை ஆங்கிலத் தளபதி டயர் என்பவரால் நடந்தது

220) ஜாலியன் வாலாவாக் படுகொலை நடந்த ஆண்டு 1919

221) ஜாலியன் வாலாவாக் படுகொலை பஞ்சாப் மாநிலத்தில் உள்ள அமிர்தரஸ் எனும் இடத்தில் நடந்தது

222) காந்தியடிகள் வழக்கறிஞர் தொழில்புரிய சென்ற நாடு தென்னாப்பிரிக்கா

223) காந்தி ஆங்கிலேயருக்கு எதிரான போராட்டங்களை அமைதி (ம) அகிம்சை வழியில் நடத்தினார்

224) ஒத்துழையாமை இயக்கம் நடந்த ஆண்டு 1920

225) தமிழகத்தில் உப்பு சத்தியாகிரகம் திருச்சி முதல் வேதாராண்யம் வரை நடந்தது

226) உப்பு சத்தியாகிரகம் காந்திஜி தலைமையில் 1930ல் நடந்தது

227) வெள்ளையனே வெளியேறு இயக்கம் 1942 - ஆகஸ்ட் - 8, பம்பாய்

228) செய் அல்லது செத்துமடி என்று கூறியவர் காந்திஜி

229) இந்தியாவின் முதல் பிரதமர் ஜவர்கலால் நேரு

230) இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்ட தமிழர்கள் பாரதியார், வ.உ.சி, சுப்பிரமணிய சிவா, வாஞ்சிநாதன், இராஜாஜி, காமராசர்

231) சுதேசி இயக்கத்தை தமிழ்நாட்டிற்கு அளித்த தவப்புதல்வர் வ.உ.சி

232) கி.பி,1872 - செப்டம்பர் - 5 ல் ஓட்டபிடாரம் எனுமிடத்தில் வ.உ.சி பிறந்தார்

233) வ.உ.சி 1936-11-18 அன்று இயற்கை எய்தினார்

234) இந்திய அரசாங்கம் வ.உ.சியை பெருமைப்படுத்தும் விதமாக கி.பி.1972 SEP 5 அன்று அவரது சிறப்பு அஞ்சல் தலையை வெளியிட்டது

235) உலகின் மிகப்பெரிய கண்டம் ஆசியா

236) உலகிலேயே பரப்பளவில் ஏழாவது மிகப்பெரிய நாடு இந்தியா`

237) இந்தியாவின் மொத்த பரப்பளவு 32,87,263ச.கி.மீ

238) இந்திய இயற்கை அமைப்புகளை 6 வகைகளாக பிரிக்கலாம் அவை வட இந்திய மலைத்தொடர், வட இந்திய சமவெளி, தார் பாலைவனம், பீடபூமிகள், கடற்கரை சமவெளிகள், தீவுகள்

239) இந்தியாவின் வடக்கு பகுதியில் அமைந்துள்ள மிகப்பெரிய மலைத்தொடர் இமயமலை

240) இமயமலையில் அமைந்துள்ள மலைத்தொடர்கள் ஹிமாத்திரி, ஹிமாச்சல், சிவாலிக்

241) இந்தியாவின் வடமேற்குபகுதியில் அமைந்துள்ள மிகப்பெரிய பாலைவனம் தார்ப்பாலைவனம்

242) தார்ப்பாலைவனத்தின் வடபகுதியில் நீர்ப்பற்றாக்குறையை தீர்க்க 649 கி.மீ நீளமுள்ள இந்திராகாந்தி கால்வாய் வெட்டப்பட்டுள்ளது

243) வட இந்திய சமவெளிக்கு தென்பகுதியில் ஆரம்பிக்கும் பீடபூமி இந்தியாவின் தென்கோகோடியில் முடிவடைகிறது

244) தக்காண பீடபூமியில் மகாநதி, கோதாவரி, கிருஷ்ணா, காவிரி ஆறுகள் மேற்கிலிருந்து கிழக்காகப் பாய்ந்து வங்காள விரிகுடாவில் கலக்கின்றன

245) நர்மதா, தபதி, ஆறுகள் மேற்காக பாய்ந்து அரபிக்கடலில் கலக்கின்றன.

246) தக்காணபீடபூமி குன்றுகளாலும், மலைகளாலும் சூழப்பட்டுள்ளது.

247) இந்தியாவின் மேற்கில் அரபிக்கடல் உள்ளது.

248) இந்தியாவின் கிழக்கில் வங்காளவிரிகுடா உள்ளது.

249) இந்தியாவின் தெற்கில் இந்தியப்பெருங்கடல் உள்ளது

250) இந்தியாவின் வடக்கில் இமயமலை உள்ளது.

251) இந்தியாவின் மூன்று பக்கங்களும் கடல்களால் சூழப்பட்டுள்ளது.

252) அரபிக்கடலுக்கும், மேற்குதொடர்ச்சிமலைக்கும் இடையில் மேற்குகடற்கரை சமவெளி அமைந்துள்ளது.

253) கொங்கணக் கடற்கரையும் மலபார் கடற்கரையும் மேற்குகடற்கரை சமவெளி யில் அமைந்துள்ளது.

254) சோழ மண்டல கடற்கரை (ம) வடசர்க்கார் கடற்கரையும் கிழக்கு கடற்கரை சமவெளி யில் அமைந்துள்ளது.

255) மேற்கு கடற்கரை சமவெளியில் மும்பை, கண்ட்லா, கொச்சி, பானாஜி போன்ற துறைமுகங்கள் உள்ளன.

256) கொங்கண கடற்கரையும், மலபார் கடற்கரையும் அமைந்துள்ளா கடற்கரைச் சமவெளி மேற்குகடற்கரை சமவெளி

257) வங்காள விரிகுடா கடலுக்கும், கிழக்கு தொடர்ச்சிமலைக்கும் இடையில் கிழக்கு கடற்கரை சமவெளி அமைந்துள்ளது

258) கிழக்கு கடற்கரை சமவெளி யில் அமைந்துள்ள துறைமுகங்கள் கொல்கத்தா, விசாகப்பட்டினம் , சென்னை புதுச்சேரி

259) பவளப்பாறைகளால் உருவான தீவு இலட்சத்தீவு ஆகும்.

260) இலட்சத்தீவு அரபிக்கடலில் உள்ளது

261) அந்தமான் நீக்கோபார் தீவுகளில் 300 சிறுசிறு தீவுகள் காணப்படுகின்றன.

262) அந்தமான் நீக்கோபார் தீவுகள் வங்காள விரிகுடா கடலில் உள்ளது

263) இலட்சத்தீவுகளில் 30 தீவுக்கட்டங்கள் உள்ளன.

264) மத்திய ஆட்சிப்பகுதிகள் அந்தமான் நிக்கோபர், சண்டிகர், தாத்ராநகர்ஹவேலி, டாமன், டையு, புதுச்சேரி, இலட்சத்தீவு

265) இந்தியாவின் அண்டைநாடுகள் பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், சீனா,நேபாளம், பூடான், மியான்மர், பங்களாதேஷ், இலங்கை

266) எவரெஸ்ட் சிகரத்தின் உயரம் 8848மீ ( இமயமலையில் உள்ளது )

267) கி.பி.1953 ல் எவரெஸ்ட் சிகரத்தை அடைந்தவர்கள் நியூசிலாந்தை சேர்ந்த எட்மண்ட் ஹிலாரி இந்தியாவைச் சேர்ந்த டென்சிங்.

268) எவரெஸ்ட் சிகரத்தில் ஏறிய இந்தியபெண்மணி பச்சேந்திரி பால்

269) கடலுக்கடியில் வாழும் முதுகெலும்பில்லா உயிரினம் பவளப்பாலிப்புகள்

270) இமயமலையில் அமைந்துள்ள புகழ்பெற்ற கோடைவாழிடங்கள் சிம்லா, முசௌரி, அல்மோரா, நைனிடால், (ம) டார்ஜிலிங்

271) காஷ்மீர் மாநிலத்திற்கு கோடைகால தலைநகரம் ஸ்ரீ நகர்
குளிர்காலத் தலைநகரம் ஜம்மு

272) தேசியக் கொடியில் 24 ஆரங்களும் அசோகர் என்பவரின் புத்த மதத்தின் சமத்துவ கோட்பாடுகளை குறிக்கிறது

273) உத்திர பிரதேசத்தில் சாரநாத் என்ற பழமையான நகரில் அசோகரின் தூண் உள்ளது
274) தேசிய கொடியை தேசிய சின்னமாக அறிவிக்கப்பட்ட ஆண்டு 26-1-1950
275) சத்யமேவ ஜயதே என்பதன் பொருள் வாய்மையே வெல்லும்
276) தேசிய கீதத்தில் 14 வரிகள் உள்ளது
277) தேசியகீதம் வங்காள மொழியில் எழுதப்பட்டது
278) தேசியகீதம் 52 நொடிகளுக்குள் பாடி முடிக்க வேண்டும்
279) இந்தியாவின் தேசிய விலங்கு புலி
280) இந்தியாவின் தேசிய விலங்கான புலி வலிமைக்கும், அச்சமின்மைக்கும் எடுத்துக்காட்டாக விளங்குகிறது
281) வந்தே மாதரம் பங்கிம் சந்திர சாட்டர்ஜி என்பவரால் எழுதப்பட்டது
282) தேசியகீதத்திற்கு இணையாக மதிக்கப்படுவது வந்தே மாதரம்
283) நம் நாட்டின் ஒற்றுமையை குறிப்பதால் தாமரை நமது தேசிய மலராக உள்ளது.
284) நமது இந்தியாவின் தேசிய மரம் ஆலமரம்
285) நமது இந்தியாவின் தேசிய பழம் மாம்பழம்
286) மக்களின் வாழ்க்கைமுறை என்பது செய்யும்தொழில், வருமானம், கலாச்சாரம், பண்பாடு, நீதிமுறை போன்றவைகளைச் சார்ந்துள்ளது
287) தமிழ்நாட்டின் நெற்களஞ்சியம் தஞ்சாவூர்
288) மனிதன் 8000 ஆண்டுகளுக்கு முன்பே வடிவமைத்த கருவி ஏர் ( கலப்பை )
289) முதல் ஏர் தமிழ்நாட்டில் தான் உபயோகத்தில் இருந்தது என ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். இதனை நன்கோள் என்று கூறுவர்.
290) நன் என்றால் எருது என்றும் கோள் என்றால் அதனை இயக்குபவர் என்றும் பொருள்
291) சக்கரம் புதிய கற்காலத்தில் கண்டறியப்பட்டது
292) விண்மீன்களின் வாழ்க்கை காலத்தைக் கணக்கிட்ட இந்தியர் எஸ்.சந்திரசேகரன்
293) அணுசக்தி ஆராய்ச்சியில் ஈடுபட்ட இந்தியர்களுள் ஒருவர் ஹோமி பாபா
294) ஏவுகணை தொழில்நுட்ப ஆராய்ச்சியில் பங்கேற்ற இந்தியர் அப்துல்கலாம்
295) மரபணு ஆராய்ச்சி ஈடுபட்ட இந்தியர்களுள் ஒருவர் வெங்கட்ராமன் ராமகிருஷ்ணன்
296) கணிப்பொறி மென்பொருளை எழுதிய பெண்ணின் பெயர் அடா லவ்லேஸ்
297) கணிப்பொறி மொழியை (COBOL) எழுதியவர் கிரேஸ்கோப்பர்
298) மை அழிப்பானைக் (WHITENER) கண்டறிந்தவர் பெஸ்ஸி நெஸ்மித்
299) வலிப்பு நோய்க்கான மருந்தை கண்டறிந்தவர் Dr.ஆஸிமாசாட்டர்ஜி
300) ஜானகியம்மாள் தாவரவியல்துறையைச் சேர்ந்தவர்
301) தாவரங்களுக்கு உயிருண்டு என்ற உண்மையை உலகிற்கு வெளிப்படுத்திய இந்தியர் ஜெகதீஸ் சந்திரபோஸ்
302) ஜெகதீஸ் சந்திரபோஸ் 30-11-1858 அன்று பிறந்தார்
303) ரேடியோ அலைகளை கண்டறிந்தவர் J.C.போஸ்
304) லண்டன், கொல்கத்தா பல்கலைக்கழகங்கள் ஜெகதீஸ் சந்திரபோசிற்கு டாக்டர் பட்டம் வழங்கி சிறப்பித்தது
305) J.C.போஸ்க்கு ஆங்கில அரசு சர் பட்டம் வழங்கி சிறப்பித்தது
306) உண்மையான மாணவன் பணத்தையும் பதவியையும் தேடாமல் அறிவைத் தேடுவதில் ஊக்கமாய் இருப்பான் என்றவர் J.C.போஸ்
307) தாவரவியல் ஆய்வுக்காக J.C.போஸ் உருவாக்கிய ஆய்வுக்கூடத்தின் பெயர் போஸ் ஆராய்ச்சி நிறுவனம்
308) ஜெகதீஸ் சந்திரபோஸ் 23-11-1937 அன்று இறந்தார்

309) மின்விளக்கு, திரைப்படம் ஆகியவற்றைக் கண்டறிந்தவர் தாமஸ் ஆல்வா எடிசன்
310) நீராவி இயந்திரம் ஜேம்ஸ்வாட் என்பவரால் கண்டறியப்பட்டது
311) தொலைபேசி அலெக்ஸாண்டர் கிரகாம் பெல் என்பவரால் கண்டறியப்பட்டது
312) வானொலி மார்கோனி என்பவரால் கண்டறியப்பட்டது
313) தொலைக்காட்சி ஜான்பெயர்டு என்பவரால் கண்டறியப்பட்டது
314) ஆகாயவிமானம் ரைட் சகோதரர்களால் கண்டறியப்பட்டது
315) பென்சில் என்.ஜே.கண்டோ என்பவரால் கண்டறியப்பட்டது
316) ஜிப் ஜே.ஜட்சன் என்பவரால் கண்டறியப்பட்டது
317) பல்துலக்கி வில்லியம் அட்கிஸ் என்பவரால் கண்டறியப்பட்டது
318) பாராசூட் ஏ.ஜே.கெமனின் என்பவரால் கண்டறியப்பட்டது
319) நமது உரிமைகளும் கடமைகளும் நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றவை
320) நமது உரிமைகளுள் சில

i) சமத்துவ உரிமை ii) சுதந்திர உரிமை iii) சமய வழிபாட்டு உரிமை iv) சுரண்டலுக்கு எதிரான உரிமை v) பண்பாட்டு, கல்வி உரிமை vi) தீர்வு காணும் உரிமை

321) 2010 ம் ஆண்டு ஏப்ரல் 1 ம் நாள் இலவச கட்டாயக்கல்வி உரிமைச்சட்டம் நடைமுறைக்கு வந்தது
322) நமது அரசாங்கம் 14 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களை தொழிற்சாலைகளிலோ (அ) கடைகளிலோ பணியில் அமர்த்த தடை விதித்துள்ளது
323) நமது நாட்டின் பாரம்பரியத்தைப் பாதுகாத்தல் என்பது அடிப்படைக்கடமைகளில் ஒன்று
324) சட்டத்தின் முன் அனைவரும் சமம்
325) மக்களிடையே ஒற்றுமை உணர்வை உருவாக்கும் இணைப்புப் பாலமாக விளங்குவது விழாக்கள்
326) மனித குலத்தின் நீண்ட காலப் பாரம்பரியம் மற்றும் கலாச்சாரத்தின் பிரதிபலிப்பு விழாக்கள்
327) நமது நாட்டு மக்களாலும், அரசாலும் ஒருங்கிணைந்து கொண்டாடப்படும் விழாக்கள் தேசிய விழாக்கள் ஆகும்
328) நாம் 1947 ம் ஆண்டு ஆகஸ்ட் 15 ம் நாள் ஆங்கிலேயர்களிடமிருந்து விடுதலை பெற்றோம்
329) சுதந்திர தினத்தன்று செங்கோட்டையில் கொடியேற்றுபவர் பிரதமர்
330) சுதந்திர தினத்தன்று மாநிலங்களில் கொடியேற்றுபவர் முதலமைச்சர்
331) குடியரசு தினத்தன்று செங்கோட்டையில் கொடியேற்றுபவர் குடியரசுத்தலைவர்
332) குடியரசு தினத்தன்று மாநிலங்களில் கொடியேற்றுபவர் ஆளுனர்
333) இந்திய அரசியலமைப்பு சட்டம் 26-1-1950 அன்று நடைமுறைக்கு வந்தது
334) காந்தி 2-10-1869 அன்று பிறந்தார்
335) காந்தி பிறந்தநாளை காந்தி ஜெயந்தியாக கொண்டாடுகிறோம்
336) இயேசு கிறிஸ்து பிறப்பு தினமான டிசம்பர் 25 ம் நாள் கிறிஸ்துமஸ் கொண்டாடப்பட்டுகிறது
337) இந்தியா முழுவதும் கொண்டாடப்படும் மிகப்பெரிய பண்டிகை தீபாவளி
338) தீபாவளி = தீபம் + ஆவளி ( தீபங்களின் வரிசை)
339) தீபாவளியன்று மக்கள் மகிழ்ச்சியும் வளமும் பெற லட்சுமி தேவியை வணங்குவர்
340) இயேசுவை சிலுவையில் அறைந்த தினம் புனிதவெள்ளி
341) இயேசு உயிர்த்தெழுந்த மூன்றாம் நாள் ஈஸ்டர் பண்டிகையாகக் கொண்டாடப்படுகிறது
342) இசுலாமிய நாள்காட்டியின் ஒன்பதாவது மாதம் ரமலான்
343) பக்ரீத், மிலாது-ன்-நபி, மொகரம் ஆகியவை இஸ்லாமியர்களின் முக்கிய திருநாள்களாகும்
344) வைகாசி மாதம் பௌர்ணமி நாளில் புத்தர் பிறந்தார்
345) புத்த பௌர்ணமி (புத்த பூர்ணிமா) புத்த சமயத்தினரால் கொண்டாடப்படுகிறது

346) வர்த்தமான மகாவீரர் பிறந்த தினம் மகாவீர் ஜெயந்தியாக சமண சயத்தினரால் கொண்டாடப்படுகிறது
347) சீக்கிய மதத்தினரால் குருநானக் ஜெயந்தி கொண்டாடப்படுகிறது
348) தமிழகத்தில் கொண்டாடப்படும் அறுவடைத்திருநாள் பொங்கல்
349) பொங்கல்திருநாள் மழைக்கும், சூரியனுக்கும் நன்றி தெரிவிப்பதற்காக் கொண்டாடப்படுகிறது
350) பொங்கலின் முந்தைய நாள் போகிப்பண்டிகை
351) தை மாதத்தின் இரண்டாம் நாள் திருவள்ளுவர் தினமாகக் கொண்டாடப்படுகிறது
352) மாட்டுப்பொங்கலுக்கு மறுநாள் காணும் பொங்கல் (உழவர் திருநாள் )
353) மாட்டுப்பொங்கலன்று நடைபெறும் வீர விளையாட்டு ஜல்லிக்கட்டு
354) ஜல்லிக்கட்டுக்குப் புகழ்பெற்ற ஊர் அலங்காநல்லூர்
355) திருவோணத்தை முன்னிட்டு படகுப்போட்டிகள் நடைபெறும் இடங்கள் ஆலப்புழா, கோட்டயம்
356) கோதுமை அறுவடைக் காலத்தில் பங்குனி மாதம் பௌர்ணமி நாளில் ஹோலிப்பண்டிகை வட மாநிலங்களில் கொண்டாடப்படுகிறது
357) சகோதரத்துவத்தை மேம்படுத்த ரக் ஷா பந்தன் திருவிழா கொண்டாடப்படுகிறது
358) ஆடிப்பெருக்கு ஆண்டுதோறும் ஆடி மாதம் 18 ஆம் நாள் கொண்டாடப்படுகிறது
359) இந்தியாவின் முதல் பிரதமர் நேரு
360) நேருவின் பிறந்த நாள் நவம்பர்-14
361) நேருவின் பிறந்த நாள் குழந்தைகள் தினமாகக் கொண்டாடப்படுகிறது
362) ஆசிரியர் தினம் செப்டம்பர்-5 ( Dr.ராதாகிருஷ்ணன் பிறந்தநாள் )
363) அமேரிக்க ஐக்கிய நாட்டைச் சேர்ந்த கேலார்ட் நெல்சன் என்பவர் புவியையும் அதில் உள்ள தாவர உயிரிகளையும் பாதுகாக்க வேண்டி 1970 ஆம் ஆண்டு ஏப்ரல் 22 ம் நாள் புவி தினம் கொண்டாடினார்
364) ஆண்டுதோறும் புவி தினம் கொண்டாடப்படும் நாள் ஏப்ரல் 22
365) கிறிஸ்துமஸ் அன்பு மற்றும் கருணை ஆகியவற்றை வலியுறுத்தும் விதமாக கொண்டாடப்படுகிறது
366) நம்மை பாதுகாத்துக் கொள்ள நாம் மேற்கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை பாதுகாப்பு எனப்படும்
367) விபத்து ஏற்படுவதற்கான முக்கிய காரணங்கள் கவனக்குறைவு, விதிகளை மீறுதல், எச்சரிக்கையின்மை, அவசரம்
368) அருவிகளில் குளிக்கும் போது பாதுகாப்பு கம்பிகளைத் தாண்டி செல்லக் கூடாது
369) இந்தியா சுதந்திரம் அடைந்தபோது தமிழ்நாடு சென்னை மாகாணம் என்ற பெயரால் அழைக்கப்பட்டது
370) சென்னை மாகாணம் மொழிவாரியாக 1956ல் பிரிக்கப்பட்டது
371) 14-1-69 ல் சென்னை மாநிலம் தமிழ்நாடு என்று அப்போதைய முதலமைச்சர் அறிஞர் அண்ணா என்பவரால் மாற்றப்பட்டது
372) இந்தியாவின் பரப்பளவில் 11வது மிகப்பெரிய மாநிலம் தமிழ்நாடு
373) தமிழகம் இந்திய பரப்பளவில் 4% இடத்தை பெற்றுள்ளது
374) தமிழ்நாடு மிக நீண்ட கடற்கரையைக் கொண்டுள்ளது ( 1000 கி.மீ நீளம் )
375) தமிழ்நாட்டின் எல்லைகள் :

கிழக்கு - வங்காள விரிகுடா
மேற்கு - கேரளா
வடக்கு - ஆந்திரா, கர்நாடகா
தெற்கு - இந்தியப் பெருங்கடல்

376) தமிழ்நாட்டின் அண்டை மாநிலங்கள் :

கேரளா, ஆந்திரா, கர்நாடகா

377) தமிழ்நாட்டின் இயற்கை அமைப்பை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை மலைகள், பீடபூமி, சமவெளிகள்

378) தமிழ்நாட்டிலுள்ள மலைப்பகுதிகளின் இரண்டு பிரிவுகள் மேற்குதொடர்ச்சி மலைகள், கிழக்கு தொடர்ச்சி மலைகள்

379) மேற்குதொடர்ச்சி மலைகள் தொடர்ச்சியான மலைகளாகும்

380) கிழக்குத் தொடர்ச்சி மலைகள் விடுபட்ட மலைத்தொடர்களாக அமைந்துள்ளது

381) மேற்குதொடர்ச்சி மலைத்தொடர்களும் , கிழக்கு தொடர்ச்சி மலைகளும் நீலகிரி மலையில் சந்திக்கின்றன

382) நீலகிரி மலையின் உயரமான சிகரம் தொட்டபெட்டா

383) மேற்கு தொடர்ச்சி மலைத்தொடரின் மிக உயர்ந்த மலைகள் நீலகிரிமலை (ம) ஆனைமலை

384) தென்னிந்தியாவின் மிக உயர்ந்த சிகரம் ஆனைமலையில் உள்ள ஆனைமுடி

385) மேற்குதொடர்ச்சி மலையில் உள்ள உதகமண்டலமும் கிழக்குதொடர்ச்சி மலையில் உள்ள ஏற்காடும் புகழ்பெற்ற மலைவாழிடங்களாகும்.

386) தக்காணபீடபூமியின் தென் கிழக்குப்பகுதியில் அமைந்துள்ள மாநிலம் தமிழ்நாடு

387) தமிழ்நாட்டில் உள்ள கோவை, நீலகிரி மாவட்டங்கள் தக்காணபீடபூமியின் பகுதிகளாகும்

388) கிழக்கு கடற்கரை சமவெளி தமிழ்நாட்டில் சோழமண்டல கடற்கரை என அழைக்கப்படுகிறது ( இதன் அகலம் 80 கி.மீ முதல் 250 கி.மீ வரை )

389) தமிழ்நாட்டில் காவிரி, வைகை, பாலாறு, தாமிரபரணி, தென்பெண்ணை போன்ற ஆறுகள் பாய்கிறது.

390) தமிழ்நாட்டில் பாயும் பெரும்பாலான ஆறுகள் உருவாகும் இடம் மேற்கு தொடர்ச்சி மலை

391) தமிழ்நாட்டில் கிழக்கு கடற்கரை சமவெளி பரவியுள்ள மாவட்டங்கள் கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, இராமநாதபுரம், திருவாரூர், தஞ்சாவூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, கடலூர், விழுப்புரம், காஞ்சிபுரம் சென்னை, திருவள்ளூர்

392) தமிழ்நாட்டின் சென்னை இந்தியாவின் 4வது மிகப்பெரிய நகரமாகும்

393) தமிழ்நாடு இந்தியாவின் 7வது மக்கள் தொகை மிகுந்த மாநிலம்

394) தமிழ்நாட்டில் தொழில்களுக்கு பெயர் பெற்ற மாவட்டங்கள்

i) கோயம்புத்தூர் - நெசவாலைகள்

ii) ஈரோடு - மஞ்சள் சாகுபடி

iii) திருப்பூர் - ஆயத்த ஆடை ஏற்றுமதி

iv) சேலம் - இரும்பு உருக்கு ஆலைகள்

v) நாமக்கல் - கோழிப்பண்ணைகள்

vi) சிவகாசி - அச்சுத்தொழில், பட்டாசு தயாரித்தல்

vii) வேலூர் - தோல் தொழில்

viii) தஞ்சாவூர் - விவசாயம்,

ix) சென்னை - தகவல் தொழில் நுட்பம்

395) தமிழ்நாட்டின் சின்னங்கள்

விலங்கு - வரையாடு

மலர் - செங்காந்தள் மலர்

மரம் - பனைமரம்

பறவை - மரகதப்புறா

மாநில விளையாட்டு - கபடி

396) தமிழக அரசின் முத்திரையில் உள்ள சின்னம் ஸ்ரீவில்லிபுத்தூர் கோயில்

397) கிராமப்புற மக்களின் வாழ்க்கையோடு இணைந்த கலைகள் நாட்டுப்புறக் கலைகள் எனப்படும்

398) குறிப்பிடத்தக்க நாட்டுபுறக்கலைகள் தெருக்கூத்து, கரகாட்டம், ஒயிலாட்டம், காவடியாட்டம், கும்மி, கோலாட்டம்

399) கூத்துக் கலையின் படிப்படியான வளர்ச்சி நாடகங்கள்

400) ஒயில் என்னும் சொல்லுக்கு அழகு என்பது பொருள்

401) காலங்காலமாக கூத்துக்கலை நிகழ்த்தும் கலைஞர்கள் உள்ள இடம் திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள புரிசை எனும் கிராமம்

402) கிராமிய ஆடல் பாடல்களில் தனிச் சிறப்பும் மக்களின் வரவேற்பும் பெற்ற சிறப்புடைய கலை கும்மி

403) தமிழகத்தின் பழமையான கிராமியக்கலைகளுள் ஒன்று புரவியாட்டம் ( பொய்க்கால் குதிரை )

404) பொதுமக்களுக்கு தேவையான தகவல்களை வழங்கும் கலை வில்லுப்பாட்டு

405) தலையில் செம்பு வைத்து ஆடும் ஆட்டம் கரகாட்டம்

406) வட்டமாக நின்று கைகளைக் கொட்டி ஓசை எழுப்பும் ஆட்டம் கும்மி

407) ஒயிலாட்டம் புகழ் பெற்று விளங்கும் மாவட்டங்கள் மதுரை , தேனி , விருதுநகர்

408) கதைகளை நடிப்பு மூலம் தெருவில் நடித்துக்காட்டப்படும் கலை தெருக்கூத்து

409) பாய்க்கு பெயர்பெற்ற ஊர் பத்தமடை

410) தமிழகத்தில் பெரும்பாலான கைவினைபொருட்கள் மூங்கிலைக் கொண்டு தயாரிக்கபடுகிறது

411) கருப்பு நிற மட்பாண்டங்களுக்குப் பெயர் பெற்றது திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள காரைக்குடி

412) கைவினைத் தொழிலாளர்களால் முதன் முதலில் செய்யப்பட்ட பொருள் செங்கல்

413) தலையாட்டி பொம்மைக்கு புகழ் பெற்ற ஊர் தஞ்சாவூர்

414) வரலாற்றிலேயே தென்னிந்தியாவில்தான் கற்களில் செதுக்கிய வேலைப்பாடுகள் ஓர் உயர்ந்த இடத்தைப் பெற்று திகழ்கின்றன

415) மாக்கல்லில் செதுக்கி செய்யும் கைவேலைகள் நடைபெறும் பகுதிகள் புதுச்சேரி, கடலூர், சேலம்

416) கருங்கல்லில் செதுக்கி செய்யும் கைவேலைகள் நடைபெறும் பகுதிகள் மகாபலிபுரம், காஞ்சிபுரம் மாவட்ட சுற்று வட்டாரப் பகுதிகள்

417) சிவப்பு மற்றும் கறுப்பு கலந்த மட்பாண்டங்கள் கிடைக்கும் இடம் வேலூர்

418) மூங்கிலானது 24மணி நேரத்தில் 3 அடி உயரம் வளரக்கூடியது

419) தர்மபுரி, சேலம், கோவை, வேலூர் மற்றும் திருச்சி போன்ற மாவட்டங்கள் கைவினைப்பொருள்கள் செய்வதில் புகழ் பெற்று விளங்குகின்றன

420) பருத்தி நெசவிற்கு பெயர் பெற்றவை கோவை, ஆரணி, தஞ்சை, கரூர், மதுரை, ஈரோடு

421) நுணுக்கமான ஒரு பட்டுப் புடவை தயார் செய்ய 30முதல் 40 நாள்கள் ஆகும்

Mail : napoos@ymail.com Cell : 8608225854, 9659966192